நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.

நாள் : 02.09.2020

2020-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2 -ஆம் தேதி புதன் கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் அவசரக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

பொருள் : 1

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 10173/2020/பா.ச.தி.-2 நாள்.02.09.2020 இன்படி சத்தியமங்கலம் நகராட்சிக்கு பாதாள சாக்கடை அமைக்கப்பட்டுள்ள வீட்டு இணைப்புகளுக்கு Internal Plumbing செய்யும் பணிகளுக்கு திட்ட ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறப்பட்டது, பெறப்பட்ட ஆணையினை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 6050 இணைப்புகளும், திட்ட நிதி ரூ.310.00 இலட்சத்திற்கு கீழ்கண்ட அலகின்படி அனுமதி பெறப்பட்டது.

| Sl.No | Name of Work | No .of. Unit | Estimated Cost (Rs.in Lakhs ) | Source of Fund |
|---|---|---|---|---|
| 1 | Providing Internal Plumbing to 6050 nos house service connection | 6050-UGSS– HSC | Rs.310.00 | TUFIDCO (Loan Interest free loan ) |

மேற்கண்ட பணிக்கு TUFIDCO நிறுவனத்திடம் வட்டியில்லாத கடன் பெற்று திட்டம் செயல்படுத்த நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: -

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) TUFIDCO நிறுவனத்திடமிருந்து வட்டியில்லாத கடன் பெற்று திட்டம் செயல்படுத்தலாம்.
3) திட்ட நிதி ஒதுக்கீடு போக மீதமுள்ள தொகையினை வருவாய் நிதியில் ஈடு செய்துக்கொள்ளலாம்.
4) இத்திட்டம் செயல்படுத்தும் பொருட்டு டெண்டர் விளம்பரம் மற்றும் இதர செலவுகள் நகராட்சியின் வருவாய் நிதியில் ஈடு செய்துக்கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 435. அனுமதிக்கப்பட்டது. நாள் 02.09.2020

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.

நாள் : 28.09.2020

2020-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 -ஆம் தேதி புதன் கிழமை மாலை 04.30 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் ஆகஸ்டு 2020-ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 436. பதிவு செய்யப்பட்டது. நாள் 31.08.2020

**பொருள் : 2**

இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்டு 2020-ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 437. பதிவு செய்யப்பட்டது. நாள் 30.09.2020

**பொருள் : 3**

சத்தியமங்கலம் நகராட்சியில் பவானி ஆற்று நீரை கொண்டு இரண்டு தலைமை நீரேற்று நிலையங்கள் ஒன்று ரங்கசமுத்திரம் 1966 ஆம் ஆண்டு மற்றறொன்று கோம்புபள்ளம் 1996 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு நகராட்சி பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கீட்டின்படி 37816 ஆகும். தற்பொழுது எதிர்வரும் ஆண்டுகளில் சுமார் 40000 மக்கட் தொகை வசிக்க இயலும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் 13000 வீட்டு வரி விதிப்புகள், 6350 குடிநீர் இணைப்புகள் மற்றும் இதர வரவின வருவாய் இனங்கள் வசூல் செய்யப்பட்டு வருகின்றன. தற்பொழுது நகராட்சி அலுவலகத்தில் போதிய கள பணியாளர்கள் இல்லாமல் பொறியாளர் பிரிவில் கட்டுமான பணிகள், குடிநீர் விநியோகம் மற்றும் இதர பணிகள் விரைவாக செய்ய இயலாத நிலையில் உள்ளது. மேலும், மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களான சாலை, மழை நீர் வடிகால், கட்டிடங்கள் போன்ற பணிகள் கண்காணிக்க பணி ஆய்வர் இல்லாமல் அன்றாட கட்டுமான பணிகளை கவனிக்க முடியாத நிலையில் உள்ளது. கீழ்கண்ட இனங்களில் பணி மற்றும் பணியாளர்கள் குறித்த விபரங்கள் வருமாறு.

**தலைமை நீரேற்று நிலையம் :**

இந்நகராட்சிக்கு பவானி ஆற்றிலிருந்து தினசரி 3.63 MLD குடிநீர் எடுக்கப்பட்டு முறையே சுத்திகரிக்கப்பட்டு 39.892 கி.மி அளவிற்கு பகிர்மான குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் இரண்டு தலைமை நீரேற்று நிலையத்திற்கும் சேர்த்து ஒரு மின் பணியாளர் மட்டுமே உள்ளன. இரண்டு நீரேற்று நிலையமும் காலை 4.30 மணி முதல் இரவு 9.30 வரை இயக்கப்பட்டு வருகிறது. இதன் மத்தியில் மின் டிரான்ஸ்பார்மரில் அடிக்கடி மின் தடை ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. மின் பணியாளர் அங்கும் இங்கும் சென்று மின்சார பணிகள் சீர் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே, இந்நகராட்சி பொறியியல் பிரிவில் போதிய

பணியாளர்கள் இல்லாதால் வெளி ஆட்கள் மூலம் பம்புகள் இயக்க இரண்டு (2) நபர்கள் ஏற்பாடுகள் செய்ய வேண்டப்படுகிறது.

**குழாய் திறப்பாளர்கள்:**

இந்நகராட்சியில் 39.892 கி.மீ அளவிற்கு பகிர்மான குழாய்கள் மூலம் உரிய கேட்வால்வுகள் வழியாக வீதிகளுக்கும், தனியார் குடிநீர் இணைப்புகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது குழாய் 64, தனியார் குடிநீர் குழாய் இணைப்புகள் - 6350 எண்ணிக்கைகள் உள்ளன. ஆனால் குழாய் திறக்கும் பணியாளர்கள் மிகவும் குறைவாக உள்ளனர். ஒரு நபர் மட்டும் 5 (ஐந்து ) வார்டுகளுக்கு காலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது பணிபுரியும் பணியாளர்கள் ஒய்வூயின்றி பணிபுரிந்து வருகிறார்கள். இதனால் பல இடத்தில் குடிநீர் விநியோக பிரச்சனைகள் ஏற்பட்டு வருகிறது. இதனை சமாளிக்கும் பொருட்டு கூடுதலாக 2 (இரண்டு) குழாய் திறக்கும் பணிக்கு வெளி ஆட்கள் மூலம் ஏற்பாடுகள் செய்ய வேண்டப்படுகிறது.

**மீட்டர் ரீட்டிங் கணிணியில் பதிவு செய்தல்:**

இந்நகராட்சியில் தற்பொழுது 6221 தனியார் குடிநீர் இணைப்புகள் உள்ளன. குடிநீர் இணைப்புகள் மூலம் நகராட்சிக்கு குடிநீர் கட்டண கேட்பு தொகை ரூ.87.50 இலட்சம் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு இணைப்பு நேரடியாக சென்று குடிநீர் மீட்டரில் அளவீடு செய்து நகராட்சி நிர்வாக ஆணையரக மென்பொருளில் CFC இல் 4 (நான்கு) காலாண்டிற்கு பதியப்பட்டு குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். நடைமுறையில் ஒரு காலாண்டுற்கு 6350 இணைப்புகள், மொத்தம் 4 காலாண்டிற்கு 25000 பதிவுகள் கணிணியில் ஏற்றம் செய்து குடிநீர் கட்டண வசூலிக்க போதிய கால அவகாசம் இல்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதனை சமாளிக்கும் பொருட்டு நகராட்சியின் பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாமையும் கருத்தில் கொண்டு கூடுதலாக 2 (இரண்டு) கணிணியில் மீட்டர் ரீட்டிங் பதிவு செய்யும் பணிக்கு வெளி ஆட்கள் மூலம் ஏற்பாடுகள் செய்ய வேண்டப்படுகிறது.

**தொழில் நுட்ப உதவியாளர்கள் :**

இந்நகராட்சி 2016-17 முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை மாநில மற்றும் மத்திய அரசால் சாலை, மழைநீர் வடிகால், கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்பு பணிகளுக்கு அதிகளவில் திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு நடைபெற்று கொண்டு வருகின்றன. ஒவ்வொரு திட்டம் தலைமை பொறியாளர் சென்னை அவர்களை நேரில் சென்று சுமார் 7 முதல் 10 நாட்கள் அங்கேயே தங்கியிருந்து தொழில் நுட்ப அங்கீகாரம், பணி முன்னேற்றம், பணி முடிவுறிக்கை போன்றவைகள் ஒப்புதல் பெறுவது அவசியம் ஆகும். ஆனால்,இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பொதுப்பணி மேற்பார்வையாளர் பணியிடம் மட்டும் உள்ளது. தினசரி கள ஆய்வு மேற்கொள்ளப்படவும், குடிநீர் பிரச்சனைகள் சமாளிக்கவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களுக்கு உரிய அறிக்கைகள் அனுப்பவும் மற்றும் அத்தியாவசிய பணிகளும் பார்க்கப்பட வேண்டும். ஒரு பணியாளர் கொண்டு இத்தனை பணிகள் பார்ப்பது மிகவும் கடினமாக உள்ளது. கூடுதலாக பொறியாளர்கள் இருந்தால் அனைத்து பணிகளும் பிரித்து விரைவாக செயல்படுத்த முடியும்.பொதுமக்களுக்கும் அவ்வபோது ஏற்படும் குடிநீர் விநியோகம்,வடிகால்,சாலை மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு குறித்த பிரச்சனைகள் தீர்க்கபட முடியும். எனவே, தொழில் நுட்ப உதவியாளர் ஒரு நபர் மட்டும் வெளி ஆட்கள் மூலம் ஏற்பாடுகள் செய்ய வேண்டப்படுகிறது.

**மின் பணியாளர்:**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ரங்கசமுத்திரம் மற்றும் கோம்புபள்ளம் தலைமை நீரேற்று நிலையத்தில ஆற்று நீர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழியே 20 கு.தி.,50 கு.தி.,35 கு.தி, திறன் கொண்ட மின் மோட்டார்கள் இயக்கப்பட்டு வருகிறது. ஆற்றுபடுகையிலிருந்து சுமார் காலை 4.30 மணி முதல் இரவு 10.00 மணி வரை மின் மோட்டார்கள் இடைவிடாமல் இயக்கப்பட்டு வருகிறது. இப்பணியினை மின் பணியாளர் மட்டுமே செயல்படுத்த முடியும். இப்பணிக்கு மின் பணியாளர் ஒருவர் மட்டுமே இருந்துள்ளார்கள். அவரும் கோபிச்செட்டிபாளையம் நகராட்சிக்கு மாற்றம் செய்யப்பட்டார். எனவே, இருக்கும் பணியாளர் வைத்து கொண்டு பணியை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணியாளர்களுக்கு போதிய ஓய்வின்றி பணிகள் பார்த்து கொண்டு வருகிறார்கள். இதனால் பணியாளர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே,மின் பணியாளர் ஒரு நபர் மட்டும் வெளி ஆட்கள் மூலம் ஏற்பாடுகள் செய்ய வேண்டப்படுகிறது.

சுருக்க பட்டியல்

| வ.எண். | பணியிடம் | தற்போதுள்ள பணியாளர் விபரம் | தேவைப்படும் பணியாளர் (வெளி ஆட்கள்) |
|---|---|---|---|
| 1 | குழாய் திறப்பாளர் | காலியாக உள்ளது | 2 நபர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 2 | கணிணி ஆப்ரேட்டர் | காலியாக உள்ளது | 2 நபர்கள் |
| 3 | தொழில் நுட்ப உதவியாளர் | காலியாக உள்ளது | 1 நபர் |
| 4 | மின் பணியாளர் | காலியாக உள்ளது | 1 நபர் |
| | | மொத்தம் | 6 நபர்கள் |

எனவே, மேற்கண்ட பணியாளர்கள் பற்றாகுறையால் தற்பொழுது உள்ள பணியாளர்களுக்கு அதிகளவில் மன உளைச்சல் ஏற்படுகிறது .கீழ்கண்ட நபர்கள் உரிய கல்வி தகுதிகள் உடன் வெளி ஆட்கள் (Out Sourcing) மூலம் பணியமர்த்த கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட அட்டவணையின்படி வெளி ஆட்கள் மூலம் பணியினை மேற்கொள்ள ஒன்பது மாதத்திற்கு ரூ.9.67 இலட்சம் ஆகும் இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 438. அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2020

**பொருள் : 4**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட (1) கோட்டுவீரம்பாளையம் மாசானி பத்திரகாளியம்மன் கோவில் எதிரில் ஆர்.கே.நகர் (2) கடடபொம்மன் நகர் (பாரஸ்ட் டிப்போ கிழக்கு வீதி (3) சுசீந்திரன் லேஅவுட் (4) இந்திரா நகர் (5) SMZ Avenue ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்கள் அனைவரும் தாங்கள் வசிக்கும் வீதியில் மின் விளக்கு இல்லாத காரணத்தால் இரவு நேரங்களில் பல்வேறு திருட்டு சம்பவங்கள் தினமும் அரங்கேற்றி வருவதாலும், மதுப்பிரியர்கள் தினமும் நல் இரவில் மது அருந்திவிட்டு ரகளையில் ஈடுப்பட்டுவருகிறார்கள். மேலும்,இரவு நேரங்களில் பெண்கள் தனியாக கடைக்கு கூட செல்ல இயலவில்லை என்று அந்த அந்த பகுதி உள்ள பொதுமக்கள் புகார்கள் வழங்கியுள்ளார்கள். வரப்பெற்ற கடிதங்கள் நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. எனவே, இப்பொருள் மீது சிறப்பினமாக கருதி புதிதாக தெருவிளக்கு வசதிகள் செய்யும் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.1.20 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண்.1021,1023,1024/2020/இ1)

அலுவலக குறிப்பு :-

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம், 2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 439. அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2020

**பொருள் : 5**

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண். 29280/2020/WB நாள்.25.9.2020 இன்படி UTIS செயல்படுத்தும் பொருட்டு ஆறு மாத காலத்திற்கு (01.10.2019 முதல் 31.03.2020)வரை Bandwidth cost தொகையினை செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. மாநில நிதி ஆணையம் (SFC) மான்யத்தில் 30.9.2019 வரையிலான Bandwidth தொகையினை பிடித்தம் செய்யப்பட்டு M/s.BSNL நிறுவனத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மூலம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. தற்பொழுது நிர்வாக காரணத்தால் மான்யத்திலிருந்து Bandwidth கட்டணம் பிடித்தம் செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. மேலும், M/s.BSNL நிறுவனத்திற்கு 01.10.2019 முதல் 31.12.2019 வரை மற்றும் 01.01.2020 முதல் 31.03.2020 வரைகாலாண்டிற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளே செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது.

எனவே, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்திரவின்படியும் பொது மக்களுக்கு கணிணி சேவைகள் தங்கு தடையின்றி வழங்கிடவும் Bandwidth cost ஒரு காலண்டிற்கு ரூ.48295-/- (VP No. BB – 43468+Data Centre Connectivity Charges ) யை என்று நிர்ணயிக்கப்பட்டு எதிர்வரும் 31.3.2021 வரை உள்ள காலத்திற்கு தொகை செலுத்தும் பொருட்டு உத்தேச செலவின தொகை ரூ.3.00 இலட்சம் எதிர்பார்க்கப்படுகிறது. எனவே,அவசர அவசியம் கருதி இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.
3) முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண். 1069/2020/இ1)

தீர்மானம் எண் : 440. அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2020

பொருள் : 6

அரசாணை எண். (D) 298 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் ( MA IV) துறை நாள். 02.09.2020 ன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 8763/2020/ஆர். 2 நாள்.29.09.2020 கொரோனா 19 நோய் தடுப்பு முடக்கப்பட்ட காலத்தில் ( Lock Down) உள்ளாட்சிகளின் அமைப்புக்கு சொந்தமான மாத வாடகை கடைகள் மற்றும் குத்தகைக்கு விடப்பட்ட சைக்கிள் ஸ்டேண்ட், வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தை போன்ற ஒருவருட குத்தகை இனங்கள் ஆகியவற்றிற்கு 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு குத்தகை மற்றும் வாடகை தொகையை தள்ளுபடி செய்ய பிறப்பிக்கப்பட்டு வரப்பெற்ற ஆணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 441. அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2020

பொருள் : 7

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வாகனங்கள் கட்டண வசூல் செய்யும் உரிமம், பேருந்து நிலையத்தில் கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம், பழைய பேருந்து நிலைய கடை எண்ணிக்கை-1, கச்சேரி வீதி சத்திரக்கடை எண்ணிக்கை -22, புதிய பேருந்து நிலைய கடை எண்ணிக்கை -12 மற்றும் வாரச்சந்தை வணிக வளாக கடை எண்ணிக்கை -3 ஆகியவை நகர்மன்ற தீர்மான எண். 893, 948, 949, 255 மற்றும் முன் அனுமதி தீர்மானங்களின்படி மேற்கண்ட எண்ணிக்கை கொண்ட கடை இனங்களை கொரோனா நோய் தொற்று காரணமாக ஐந்து மாதங்களாக அரசு உத்திரவின்படி பொது போக்குவரத்து பேருந்துகள் இல்லாததால் யாரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோர முன் வரவில்லை. தினதந்தி நாளிதழில் 10.06.2020 ஆம் தேதி விளம்பரம் செய்யப்பட்டும் அனைத்து கடைதாரர்களுக்கும் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. தற்போது கோரப்பட்ட ஏலம் ஏழாவது ஏலம் ஆகும். மேலும் 16.09.2020 ஆம் தேதி நடைபெற்ற குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட இனம் மட்டும் சென்ற பழைய மாத வாடகை காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளதால் இதனை உறுதி செய்வது குறித்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | க. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பழைய மாத வாடகை | உயர்ந்த பட்ச மாத வாடகை | உரிமம் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வாரச்சந்தை வணிக வளாக கடை | 32 | ப. சதீஸ்குமார், த/பெ. பண்ணன் | 6600 | 6800 | 01.10.2020 முதல் 30.09.2023 |

அலுவலகக்குறிப்பு :

மேற்கண்ட ஆண்டு குத்தகை இனங்களாக மற்றும் கடைகள் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இதில் மேற்கண்ட கடை இனம் அரசாணை எண். 92 ன்படி மூன்றாண்டு காலத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி மாத வாடகையாக வரப்பெற்றுள்ளது. இது சென்ற பழைய மாத வாடகை காட்டிலும் கூடுதலாக மாத வாடகை சென்றுள்ளதாலும். கொரோனா நோய் தடுப்பு காரணமாக கடந்த மாதங்களாக மேற்காணும் கடைகள் திறக்கப்படாத நிலையில் ஏழாவது முறையாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் மேற்காணும் உயர்ந்த பட்ச தொகைகளை ஏற்றுக் கொண்டு ஒப்பந்தாரர்களுக்கு அரசாணை எண். 92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளின்படி உறுதி செய்து மன்றம் அனுமதிக்கலாம்.
(ந. க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 442. அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2020

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கடை இனத்திற்கு வரும் 30.09.2020 உடன் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை எண். (நிலை) 92 ந. நி. கு. வ. (ந.நி.4) துறை நாள். 03.07.2007 இன்படி மேலும் நீட்டித்துக் கொள்வது குறித்த விருப்பப்படிவம் பெறப்பட்டது. அதன்படி உரிமக் கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன் வைப்புத் தொகைகள் பெறப்பட்டதினை தொடர்ந்து நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் 01.10.2020 முதல் 30.09.2023 முடிய மூன்றாண்டு காலத்திற்கு அதே உரிமதாரருக்கு நீட்டிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண். | வரிவதிப்பு எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பழைய மாத வாடகை | 15% உயர்வு செய்த பின் மாத வாடகை | உரிமம் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வாரச்சந்தை வணிக வளாக கடை | 39 | 061/SC03/ 00004 | S.M. பஷீர் | 8100 | 9315 | 01.10.2020 முதல் 30.09.20203 |

அலுவலகக்குறிப்பு :

1. மேற்கண்ட கடை இனம் வரும் 30.09.2020 உடன் முடிவடைவதை யொட்டி, மேலும் அரசாணை எண். 92 ன்படி உரிய உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன் வைப்புத் தொகைகள் பெறப்பட்டது. எனவே, மேற்கண்ட கடைக்கு அரசாணை எண். 92 இன்படி நிபந்தனைகளுக்குட்பட்டு மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. 01.10.2020 முதல் கடையின் உரிமம் காலம் புதுபிக்க வேண்டியுள்ளதால் நகர் மன்ற முன் அனுமதி பெறப்பட்டு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 443. அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2020

பொருள் : 9

சத்தியமங்கலம் நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.12, கதவு எண்.88 வடக்குப்பேட்டை ரோட்டில் இயங்கி வரும் தொலைபேசி நிலையம் (BSNL) நகராட்சி மூலம் சொத்துவரி விதிப்பு எண். 061/012/00087 பழைய வரிவிதிப்பு எண். 061/13087 வரி விதிப்பு மூலம் 2000-2001 ம் ஆண்டு முதல் வரிவிதிப்பு செய்யப்பட்டு 2019-2020 ஆம் ஆண்டு வரை நிலுவையாக ரூ. 2475488/- உள்ளது. மேற்கண்ட சொத்துவரியினை செலுத்தக் கோரி BSNL நிறுவனத்திற்கு பல அறிவிப்புகள் வழங்கப்பட்ட நிலையில் BSNL நிறுவனம் சொத்துவரியினை சேவைக்கட்டணமாக அல்லது வரிவிலக்கு செய்ய கோரி சென்னை உயர் நீதி மன்றத்தில் ரீட் மனு எண். 12962/2012 மூலம் நகராட்சிக்கு எதிராக சொத்துவரியினை வசூலிக்க தடை உத்திரவு பெறப்பட்டது. இதனை தொடர்ந்து நகராட்சி சார்பாக உரிய அறிக்கை நகராட்சி வழக்கறிஞர் திரு. பி. ஆனந்த் அவர்கள் மூலம் தாக்கல் செய்யப்பட்டு மேற்கண்ட வழக்கின் தீர்ப்பின் 17.09.2019 இல் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பாணை பெறப்பட்டது. தீர்ப்பாணையில் 19.04.2017 ம் தேதி முதல் தொலைபேசி நிலையம் BSNL நிறுவனத்தின் மூலம் செய்யப்பட்டதால் அன்றைய தேதி முதல் சொத்துவரி விதிக்கப்பட்ட வரியினை வசூலிக்க உறுதி செய்து தீர்ப்பாணை வழங்கப்பட்டது. அதற்கு முந்தைய காலத்திற்கான சொத்துவரியினை (அதாவது 2000-2001 முதல் 2010-2011 வரை) வசூலிக்க தகுதியற்றது என தீர்ப்பாணையில் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து நகராட்சி அரசு வழக்கிஞர் அவர்கள் 07.09.2020 தனது கருத்துருவில் ( Legal Opinion) இதனை வலியுறுத்தி கடிதம் வழங்கியுள்ளார். எனவே சொத்துவரி 2000-2001 முதல் 2010-2011 வரை சொத்துவரி நிலுவை பதிவேட்டின்படி ரூ. 1074208/- மற்றும் 2018-2019- ம் ஆண்டின் பொது சொத்துவரி சீராய்வின் போது தொலைபேசி நிறுவனத்திற்கு பழையவரியும் 50 சதவீதம் கூடுதலாக ரூ. 73612/- சொத்துவரி உயர்வு செய்யப்பட்டது. பின் அரசு ஆணை எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (MA-IV) வழங்கல் துறை நாள். 19.11.2019 ன்படி சொத்துவரி சீராய்வில் உயர்வு செய்யப்பட்டதை நிறுத்தி வைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டதால் உயர்வு செய்யப்பட்ட சொத்துவரி வித்தியாச வரித்தொகை ரூ. 73612/- ஐ நிலுவையாக கேட்பு பதிவேட்டில் இருந்து தள்ளுபடி செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1.சொத்துவரி விதிப்பு எண். 061/012/00087 பழைய வரிவிதிப்பு எண். 061/03087 தொலைபேசி நிலையம் ( BSNL) சொத்துவரி நிலுவை ரூ. 1074208/- ஐ சென்னை உயர்நீதிமன்றம் ரீட்மனு எண். 12962/2012 ன்படி தீர்ப்பின்படி மற்றும் திரு. பி. ஆனந்த் அரசு வழக்கறிஞரின் 07.09.2020-ன் கருத்துரு கடிதத்தின்படி சொத்துவரி நிலுவைத் தொகை ரூ.107420/- ஐ நிலுவை பதிவேட்டிலிருந்து தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2. அரசு ஆணை எண். 150 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-IV) நாள்.19.11.2019ன்படி சொத்துவரி சீராய்வில் மேற்கண்ட தொலை தொடர்புக்கு உயர்வு செய்யப்பட்ட சொத்துவரி வித்தியாச தொகை ரூ.73612/- நிலுவையாக வைக்கப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட சொத்துவரியினை தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 444. அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2020

பொருள் : 10

சொத்துவரி நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு மூலம் சேகரிக்கப்படும் மறு சுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக்குகளை சிமெண்ட் ஆலைகளுக்கு மேல் செய்து அனுப்ப தேவையான பொருட்களை சப்ளை செய்ய 09.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | கிளிப் / கிலோ | சாக்கு | பிளாஸ்டிக் டொய்ன் |
|---|---|---|---|---|
| 1 | நியூ நெல்லை டோர்ஸ், சத்தி | 120/- | 19/- | 185/- |
| 2 | மாதா ஸ்டோர்ஸ், சத்தி | 120/- | 20/- | 190/- |
| 3 | தாய் மளிகை, சத்தி | 128/- | 19/- | 185/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரித்தல்.

அலுவலகக்குறிப்பு :

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1-இல் நியூ நெல்லை ஸ்டோர்ஸ் என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைவாக உள்ளது அதனை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 596/2019/எச்.1)

தீர்மானம் எண் : 445. அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2020

பொருள் : 11

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் பள்ளி கழிவறைகள் சுத்தம் செய்ய துாய்மைப் பணியாளர்கள் 16 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். கொரோனா தொற்று காரணமாக பள்ளிகள் மூடப்பட்டுவிட்டபடியால் கடந்த 2020-ம் ஆண்டு ஏப்ரல், மே, ஜீன், ஜீலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் மேற்கண்ட 16 துாய்மை பணியாளர்கள் பள்ளிகளை சுத்தம் செய்ததுடன் கொரோனா பேரிடர் பணிகளான, பொது இடங்களில் கிருமி நாசினி தெளித்தல், பிளீச்சிங் பவுடர் போடுதல், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் கபகர குடிநீர் வழங்குதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகிய பணிகளையும் கவனித்து வந்தனர். அதனை நகர்மன்றம் அனுமதித்தும் இனி வருங்காலங்களில் மேற்கண்ட 16 துாய்மை பணியாளர்களை பள்ளிகளை சுத்தம் செய்வதுடன் கொரோனா பேரிடர் பணிகளில் ஈடுபடுத்தவும், நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு: -**

1. கொரோனா பேரிடர் பணியின் முக்கியத்துவம் கருதி பள்ளி கழிவறை துாய்மை பணியாளர்களை கொரோனா பேரிடர் பணியிலும் ஈடுபடுத்தியதை நகர் மன்றம் பின்னேற்பு வழங்கி அனுமதிக்கலாம்.
2. பள்ளி கழிவறை துாய்மை பணியாளர்களை கொரோனா பேரிடர் பணியில் ஈடுபடுத்த நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.541/2020/எச்.1)

தீர்மானம் எண் : 446. அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2020

பொருள் : 12

மனுதாரர் திரு. M.P. நாகராஜன் மற்றும் திரு. N.K. சக்திவேல் என்பவர்கள் சத்தியமங்கலம் கிராமம் வார்டு - D, பிளாக் -18, நகரளவு எண். 49/1 மற்றும் 50- இல் 6.08 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தினை மனைகளாக பிரித்து மனைப்பிரிவு அமைக்க நகராட்சி ஆணையாளர் வழியாக ந. க. எண். 1289/2019/எப்1 நாள். 03.12.2019 இன்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குர், திருப்பூர் அவர்களின் வழியே நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களுக்கு பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந. க.எண். 25092/2019/LA/TCP4 நாள்.12.2.2020 இன்படி பூங்கா, ஒதுக்கீடுகள் பொது உபயோக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு மற்றும் சாலைகள் மூலை முடக்குகளுடன் கூடிய உத்தேச மனைப்பிரிவின் சாலைஅமைப்பு பூங்கா வரைபடத்தினை அங்கீகாரம் செய்து அடிப்படை வசதிகள் நகராட்சி பொறியாளரின் சாலைகள் மற்றும் அடிப்படை வசதிகள் தரமாக அமைக்கப்பட்டுள்ளது என சான்று பெற்று மன்றத் தீர்மான நகல், சாலை அமைப்பு புகைப்படம், தான பத்திரம், பதிவு பெற்ற பின்னர் வில்லங்க சான்றுடன் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நகராட்சி பொறியாளர் அவர்களின் 02.03.2020ம் தேதிய குறிப்பில் கண்டுள்ளவாறு மனுதாரர் தனது சொந்த செலவில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 175, 176, 177, 178 மற்றும் 179 இன்படி அடிப்படை வசதிகள் செய்து தான ஆவணம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைக்க அறிவிப்பு ந.க.எண்.1289/2019/எப்.1 நாள். 02.03.2020 இல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரரின் உத்தேச இடத்தினை ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரரின் உத்தேச இடம் அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் கலப்பு குடியிருப்பு பகுதியில் உள்ளது. உத்தேச இடத்திற்கு அணுகு சாலையாக நகராட்சியினால் பராமரிப்பில் உள்ள புளியங்கோம்பை செல்லும் சாலை உள்ளது. மேற்கண்ட இடத்தினை புலத்தணிக்கை செய்து சத்தியமங்கலம் வட்டம், வார்டு - A, பிளாக் -18, நகரளவு எண். 49/1 மற்றும் 50- ல் 6.08 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடமானது 1) திரு. M.P.நாகராஜன், த/பெ.பெருமாள் 2) திரு.N.K.செந்தில்வேல் த/பெ.நாகராஜன் என்பவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும் சர்க்கார் புறம்போக்கு இடத்திலோ, அருகில் உள்ள பட்டதாரர் இடத்திலோ ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என்றும், மேலும் மேற்கண்ட இடத்தில் வேறு புகார் மனு ஏதும் வரப்படவில்லை என நகர் சார் ஆய்வாளர், சத்தியமங்கலம் அவர்கள் தனது 25.09.2020 தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். மனுதாரர் சமர்ப்பித்துள்ள அரசு வழக்குரைஞர் 1 முதல் 38 இன்படி மனுதாரர் சம்பந்தமான சொத்து ஆவணங்களை பரிசீலனை செய்ததின் அடிப்படையில் மேற்கண்ட சொத்து சம்பந்தமான சிவில் மற்றும் கிரிமினல் வழக்கு சம்பந்தமாக மாவட்ட உரிமையியல் நீதி மன்றம். சார்பு நீதிமன்றம் மற்றும் மேல்முறையீடு நீதி மன்றங்கள் ஆகியவற்றில் எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மேற்கண்ட மனைப்பிரிவில் நகராட்சி பொறியாளர் அறிவிப்பின்படி, அடிப்படை வசதிகள் செய்து நகராட்சிக்கு தானமாக அளிக்க புலப்படங்கள் மற்றும் தான பத்திரத்துடன் மின்சார வாரியத்திற்கு உரிய தொகையினை செலுத்தி 23.09.2020 இல் தானமாக ஒப்படைக்க மனு செய்துள்ளார்.

மேற்கண்ட இடத்தினை பார்வையிட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு அங்கீகாரம் செய்யப்பட்ட சாலை அமைப்பு மற்றும் பூங்கா வரைபடத்தின்படி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டதின்படி தார் சாலை சிறந்த முறையில் தரமாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் பகிர்மான குழாய் 3"0 பிவிசி பைப் சாலையின் இரு புறங்களிலும் சிமெண்ட் கான்கிரிட் மழைநீர் வடிகால் தேவையான இடத்தில் பைப் கல்வெட்டு தரமாக அமைக்கப்பட்டுள்ளது என்றும் மின் வசதிக்காக தேவையான இடத்தில் மின் கம்பங்கள் அமைக்கலாம் என்றும், இம்மனைப்பிரிவில் அனைத்து அடிப்படை வசதிகளும் தரமாக அமைக்கப்பட்டுள்ளது என தனது 23.09.2020 தேதிய குறிப்பில் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மேற்கண்ட மனைப்பிரிவு அமைக்க ரூ. 22,750/- அபிவிருத்திக் கட்டணம், மற்றும் அனுமதிக்கட்டணம் ரூ. 49,210/- நகராட்சி கருவூலகத்தில் இரசீது எண். 0000827 நாள். 1.10.2020 இன்படி செலுத்தியுள்ளார். மேலும் மேற்கண்ட சாலை பொது உபயோக இடம் மற்றும் பூங்கா ஒதுக்கீடுக்கான தானமாக பெற்ற பின் அதனை உட்பிரிவு செய்ய உட்பிரிவு கட்டணம் ரூ.750/- ஐ நகராட்சி கருவூலகத்தில் செலுத்தியுள்ளார். இரசீது எண். 0000827 நாள். 01.10.2020 அதன் விவரங்கள் சமர்ப்பித்துள்ளார்.

மேற்கண்ட மனைப்பிரிவுக்காக மின் வசதிக்காக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் லிமிடெட், கோபி செட்டிபாளையம் மின் பகிர்மான வட்டம் செலுத்திய இரசீது எண். ERG35IRSID2948 , ER/GB – 1043094 நாள் 23.09.2020 ரூ.4,31, 870/- தொகையினை செலுத்தி அதன் விபரத்தினை சமர்ப்பித்துள்ளார்.

மேலும் நகர் சார் ஆய்வாளர் மேற்கண்ட மனைப்பிரிவினை புலத்தணிக்கை செய்து 25.09.2020 ஆம் தேதி குறிப்பில் சத்தியமங்கலம் நகராட்சி, நகராட்சி கிராம் வார்டு - A, பிளாக் -18, நகரளவு எண். 49/1 மற்றும் 50- ல் 6.08 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் ந. க. எண். 25092/2019/LA/TCP4 நாள். 12.02.2020 இல் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் அங்கீகாரம் செய்யப்பட்ட சாலை, பொது இடம் மற்றும் பூங்கா வரைபடத்தின் மனைப்பிரிவில் 30 அடி மற்றும் 23 அடி சாலைகள் (12 சாலைகள்), பூங்கா 3 (Nos), பொது உபயோகம் - 1 Nos, TANGEDCO – 1 Nos ஆகியவற்றினை நில அளவை செய்யப்பட்டதில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி மேற்கண்ட சாலைகள், பூங்கா ஆகியவற்றின் அளவுகள் சரியாக உள்ளது என விபரம் சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் சமர்ப்பித்துள்ள தான ஆவணத்தில் சாலைகள் 7038.22 ச.மீ மற்றும் மூலை முடக்குள் 1.5X1.5, பூங்கா ஒதுக்கீடு – I- 907.65 ச.மீ, பூங்கா – II – 554.10 ச.மீ, பூங்கா – III– 323.98 ச.மீ மற்றும் பொது உபயோக - 99.93 ச. மீ ஆக மொத்தம் 8917.78 ச.மீ தான ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பொறியாளர் அவர்களின் 23.09.2020 தேதிய குறிப்பின்படியும், நகரசார் ஆய்வாளர் 25.09.2020 தேதிய குறிப்பின்படியும், மனுதாரர் சமர்ப்பித்துள்ள தான பத்திரத்தினை சார்பதிவாளர் அலுவலம், சத்தியமங்கலம் பத்திரபதிவு செய்யவும், நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு இறுதி குடியிருப்பு மனைப்பிரிவு மனை அங்கீகாரம் செய்து வரைபடத்திலும், கடிதத்தில் குறிப்பிடும் சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளின்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1289/2019/எப்.1)

தீர்மானம் எண் : 447. அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2020

பொருள் : 13

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் திடக்கழிவுகளை முதன்மை சேகரம் செய்ய 23 (BOV) பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் Six Round Meeting of Swachh Bharth Mission கூட்டம் 20.08.2019 முதல் 26.08.2019 வரை நடைபெற்றது. அதன் கூட்ட நிகழ்வு ( Meeting Minutes) வரிசை எண். 4-ல் திடக்கழிவு மேலாண்மையில் முதன்மை சேகரத்தில் பயன்படுத்தப்படும் பேட்டரி வாகனங்கள் (BOV) ஆண்டு முழுவதும் எந்த ஒரு இடையூறுமின்றி இயங்க வேண்டும் எனவும், தகுதி வாய்ந்தவர் மூலம் Annual Maintenance செய்திடவும் அறிவுறுத்தியுள்ளார். ஆண்டு பராமரிப்பு செய்திட ரூாய் நான்கு இலட்சத்து தொன்னூராயிரத்திற்கு ( ரூ. 4,90,000/-) நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

1. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1337/2019/எச்.1)**

தீர்மானம் எண் : 448. அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2020

பொருள் : 14

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் விழிப்புணர்வு ஸ்டிக்கரர்கள் மற்றும் நோட்டீஸ் அச்சடித்து பொது மக்களுக்கு வழங்க ஆகும் உத்தேச செலவு ரூ.1,00,000/- ( ரூபாய் ஒரு லட்சத்திற்கு) நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 2988/2015/எச்.1)

தீர்மானம் எண் : 449. அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2020

பொருள் : 15

சத்தியமங்கலம் நகராட்சிப் பொது சுகாதாரப்பிரிவு-திடக்கழிவு மேலாண்மை திட்டம்-1.திருவள்ளுவர்திடல் நுண் உரக்குடில், 2.அத்தாணி ரோடு உரக்கிடங்கில் இயங்கி வரும் Shredding Machine-களை ஆண்டுப் பராமரிப்பு (AMC) செய்யும் பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள 29.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளன.

| வரிசை எண் | பொருள் | Vino Constructions Bhavanisagar ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் | C.P.Gopalakrishnan Contractor chennimalai ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | **Fuse carrier** (32 Amps-440 Volt) (1-No) | 216 | 220 |
| 2 | Copper wire VIR (3/20) (1-M) | 42 | 45 |
| 3 | Reel(1-No) | 12 | 13 |
| 4 | 720 GI Stay Wire(1-M) | 72 | 75 |
| 5 | 35 Amps MCP(1-No) | 264 | 265 |
| 6 | 6 Sq mm Copper wire(1-M) | 132 | 135 |
| 7 | 7.5 HP three phase motor coil (including old burned coil) (1-No) | 10200 | 10500 |
| 8 | Motor bed bolt nut (3/8) (1-No) | 16 | 20 |
| 9 | V-Belt 42A(1-No) | 540 | 550 |
| 10 | Three phase panel amp-meter(1-No) | 420 | 450 |
| 11 | Three phase panel Volt-meter(1-No) | 360 | 370 |
| 12 | Three phase panel On-off switch (4 pole) (1-No) | 1440 | 1450 |
| 13 | Three phase contactors(1-No) | 3840 | 3850 |
| 14 | Over load rely(1-No) | 1860 | 1870 |
| 15 | Timer(1-No) | 2640 | 2650 |
| 16 | SS Shredding blade(1-No) | 3600 | 3620 |
| 17 | Bearings(1-No) | 5400 | 5420 |
| 18 | V pully wheel (4 inch) (1-No) | 720 | 730 |
| 19 | Earth Wiring(1-No) | 1260 | 1270 |
| 20 | Labour Charges( Per Labour) | 1000 | 1200 |
| | Total | 34034 | 34703 |

இவற்றில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரித்தல்.

அலுவலக குறிப்பு :-

1. குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Vino Constructions Bhavanisagar என்னும் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண் : 450. அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2020

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.